**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண்.74/2013</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஐனவரி மாதம் 30** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | 30.01.2026 |
| **பெயர்** | **ஜெயசங்கர்** |
| **த/பெ** | **ஏகாம்பரம்** |
| **சாட்சி** | **PW1** |
| **வயது** | **48** |
| **ஊர்** | **அனுப்பம்பட்டு** |
| **தொழில்** | |

**விசாரணை தொடங்கும் நேரம்– 01.20.p.m**

**<u>கூடுதல் முதல் விசாரணை–</u>**

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது வாக்குமூலம் கூடுதல் பிரமாணப் பத்திரம் மூலம் கூடுதல் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. இவ்வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. (1). 27.09.2010 தேதியிட்ட அக்குவிடுதலைப்பத்திரம், ஆவணம் எண் 8108/2010 என பொன்னேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ–1** எனவும்.

(2). 08.06.2012 தேதியிட்ட கிரையப்பத்திரம், ஆவணம் எண் 7321/2012 என பொன்னேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ–2** எனவும்.

(3). சார்பதிவாளர் பொன்னேரி அவர்களால் வழங்கப்பட்ட சர்வே எண்கள் 85/2எ, 85/2, 85/2பி சொத்து தொடர்பான விவல்லங்க

சான்றிதழ் அசல் **வா.சா.ஆ–3** எனவும்.

(4). வரி கிஸ்து ரசீதுகள் 12 எண்ணிக்கைகள் அசல் **வா.சா.ஆ–4** எனவும்.

(5). பட்டா, பட்டா எண் 5214 கணினி வழி எடுக்கப்பட்ட ஒளிநகல் **வா.சா.ஆ–5** எனவும். **(எதிர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).**

(6). தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்ற அறிக்கை அசல் **வா.சா.ஆ–6** எனவும். **(எதிர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).**

(7). அ–பதிவேடு நகல் 3 எண்ணிக்கைகள் **வா.சா.ஆ–7** எனவும். **(எதிர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).**

(8). சிட்டா பதிவேடு 2 எண்ணிக்கைகள் **வா.சா.ஆ–8** எனவும் **(எதிர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).**

(9). பசலி ஆண்டுகள் 1415, 1415, 1418, 1419, 1420, 1421, 1422, 1423, 1424 குறித்த அடங்கல் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ–9** எனவும். **(எதிர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).**

(10). ஏகாம்பரம் இறப்பு சன்றிதழ் அசல் **வா.சா.ஆ–10** எனவும்.

(11). சுரேஷ் இறப்பு சன்றிதழ் அசல் **வா.சா.ஆ–11** எனவும்.

(12). ஏகாம்பரம் வாரிசு சன்றிதழ் இணைய வழி எடுக்கப்பட்ட நகல் **வா.சா.ஆ–12** எனவும்.

**(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 01.30.p.m.**